பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 26 புதன்கிழமை 12.01.2022 கதிர் 296

## நாட்டில் இன்றிரவும் மின்வெட்டு அமுல்!

நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இன்று இரவும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்று மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறால் பாதிக்கப்பட்ட களனிதிஸ்ஸ அனல்மின் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள தனியார் மின் உற்பத்தி நிலையத்தின் திருத்தப் பணிகள் ☞2

# அவசரமாக டில்லி பறந்தார் இந்தியத் தூதவர்; 18 ஆம் திகதியே கூட்டு ஆவணம் கையளிப்பு!

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு எதிர்வரும் 18ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்படைப்பதற்காகத் தமிழ் பேசும் தரப்புகளின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணம் இந்தியத் தூதுவரிடம் நேற்று கையளிக்கப்படவிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பில் பங்கேற்கவிருந்தனர். எனினும், இந்தியத் தூதுவர் அவசரமாகப் புதுடில்லி சென்றுவிட்டமையால் இறுதி நேரத்தில் சந்திப்பு பிற்போடப் பட்டுள்ளது. எனினும், அவர் இலங்கை வந்த பின்னர் எதிர்வரும் 18ஆம் திகதி ஆவணம் ஒப்படைக்கப் படவுள்ளது.



# ஈழ – தமிழகத் தமிழர்கள் நாம் உரிமைகளுக்காக இணைவோம்!

## ஸ்டாலினிடம் சுமந்திரன் தெரிவிப்பு அயலகத் தமிழர் நாள் நிகழ்ச்சியில்





கொழும்பு,ஜனவரி 12

ஈழத் தமிழர்களான நாங்களும், தமிழகத் தமிழர்களான நீங்களும், பிற அயலகத் தமிழ்ச் சகோதரர்களும் வெவ்வேறு நாடுகளில் வாழ்கிறோம். எனினும் அங்கங்கு எமது அரசியல் உரிமைகளுக்கான முயற்சிகளில் நாங்கள் ஒருவருக்குகொருவர் ஆதரவாகச் செயற்படுவோம்.

– இப்படி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்குபற்றிய 'அயலகத் தமிழர் நாள்' நிகழ்வில் இணைய வழியில் கருத்துரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். ☞2

# அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இவ்வருடம் தீர்வு வழங்கும் அரசு!

## பிரதமர் மஹிந்த உறுதி



நாட்டில் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் சமகால நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞2

# இவ்வருடத்துக்குள் மாகாணத் தேர்தல்!

## கோட்டாபய அரசு உறுதி

மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு அறிவித்தது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் நீடிப்பு மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண அரசின் ☞2

## வேலைவாய்ப்பு பிரச்சினை வடக்கில் தீர்வு அவசியம்

### சஜித்திடம் யாழ். ஆயர் கோரிக்கை



(இ.கலையமுதன்)

வடக்கில் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என யாழ். மறை மாவட்ட ஆயர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ☞2

## 21 ஆம் திகதி மங்களவுக்கு நாடாளுமன்றில் அனுதாபம்



இலங்கை அரசியலில் ஆட்சியை உருவாக்கக்கூடிய பெரும் புள்ளியாகக் கருதப்பட்ட முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

## பிறந்தநாளில் நல்லூர்க் கந்தனை தரிசித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(இ.கலையமுதன்)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ இன்று காலை வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ☞2

## 16இல் மலையகத்தில் பொங்கல் விழா; சஜித், பாக்லே சிறப்பு விருந்தினர்கள்!

தொழிலாளர் தேசிய சங்கம் ஏற்பாடு செய்துள்ள தைப்பொங்கல் விழா நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தைப்பொங்கல் விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## விஞ்ஞான பீட மாணவர்களுக்கிடையில் தொடரும் மோதல்; மேலும் இருவர் காயம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் ☞2

## யாழ்., கிளிநொச்சியைச் சேர்ந்த 5 அரசியல் கைதிகள் விடுதலை

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு எதுவும் பதிவு செய்யப்படாமல் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகள் ஐவர் நேற்று வீடு திரும்பியுள்ளனர். ☞2

## வேலைவாய்ப்பு பிரச்சினை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர், இன்று தன்னுடைய பிறந்த நாளையொட்டி யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை நேரில் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றதுடன் ஆயருடன் கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

அதேவேளை, ஆயர் இல்லத்தில் சஜித் பிரேமதாஸவின் பிறந்த நாளையொட்டி விசேட ஆசீர்வாத பூஜை மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களான புத்திக பத்திரண, எராஷன் விக்ரமரட்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த யாழ். மறைமாவட்ட ஆயர்,

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் இன்று என்னைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவர் தன்னாலான முயற்சியை மேற்கொண்டு அபிவிருத்தி வேலைகளைச் செய்து வருகின்றார். ஏற்கனவே எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் இவ்வாறு அபிவிருத்தி வேலைகளைச் செய்யவில்லை. ஆகவே, அவருடைய அந்தப் பணியைப் பாராட்ட வேண்டும். எத்தனையோ வைத்தியசாலைகளுக்கு சிறுநீரக நோய்க்குரிய இயந்திரத் தொகுதிகளை வழங்கியுள்ளார். அத்தோடு பாடசாலைகளுக்கும் உதவிகள் வழங்கி வருகின்றார். சுகாதாரமும் கல்வியும் அவருடைய முக்கிய குறிக்கோள்களாகக் காணப்படுகின்றன.

அவ்வாறு ஈடுபடும் அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களுடைய பிரச்சினைகள் அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கின்றது.

நான் மூன்று விடயங்களைக் குறிப்பாகக் குறிப்பிட்டேன். அதாவது, கல்வி, மீன்பிடி, விவசாயம் என இந்த மூன்று துறைகளையும் வடக்கில் அபிவிருத்தி செய்ய வேண்டும். அத்தோடு வடக்கில் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அது உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரினேன். அதற்கு அவர் அரசில் இருப்பவர்கள்தான் அதனைச் செய்ய முடியும் என்று தெரிவித்தார் - என்றார்.

## விஞ்ஞான பீட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்து கல்வி கற்று வரும் விஞ்ஞான பீடம் மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த மாணவர்களின் வீட்டுக்குள் புகுந்த நான்காம் வருட மாணவர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் நான்காம் வருட மாணவன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, கடந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் விஞ்ஞான பீட மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மூன்றாவது மோதல் சம்பவம் இதுவாகும்.

சில வாரங்களுக்கு முன்னர் பகிடிவதை கட்டளையை மீறியதாக விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்ட சிரேஷ்ட மாணவன் ஒருவர் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்., கிளிநொச்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2019 ஆம் ஆண்டு பளை வைத்தியசாலை வைத்தியர் சிவரூபனுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு எதிராக வழக்குகள் எவையும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

குறித்த நபர்கள் குறித்து உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட்ட பல்வேறு தரப்புக்களிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர்கள் ஐவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஒப்படைக்கப்பட்டவர்களைப் பொறுப்பேற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் அவர்களைத் தத்தமது வீடுகளில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, விரைவில் வைத்தியர் சிவரூபனும் விடுதலையாவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிறந்தநாளில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றார்.

இந்நிலையில், சஜித் பிரேமதாஸவின் பிறந்த நாளான இன்று காலை காலை 10 மணியளவில் அவர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## இவ்வருடத்துக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நிலைப்பாட்டை அறிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இரு பிரதான விடயங்களைக் கருத்தில் கொண்டுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. முதலாவது விடயம் சுகாதாரப் பாதுகாப்பு.

அடுத்ததாக உள்ளூராட்சிசபைகளின் பதவிக் காலத்தில் இரு வருடங்கள் கடந்த ஆட்சியின் கீழ் சென்றது. இதனால் உள்ளூராட்சி சபைகளால் உரிய வகையில் செயற்பட முடியாமல்போனது. அடுத்த இரு வருடங்கள் கொரோனாப் பாதிப்பு. எனவே, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்குச் சேவையை வழங்குவதற்குக் காலம் வழங்க வேண்டும். அந்த வகையில்தான் பதவிக் காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சட்டம் கடந்த ஆட்சியின்போதுதான் திருத்தப்பட்டது. எனவே, அதனை மீண்டும் திருத்தாது தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலைமை உள்ளது. இது தொடர்பில் அரசு அவதானம் செலுத்தியுள்ளது. இதன்படி இந்த வருடத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் - என்றார்.

## அனைத்துப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு தற்போது சகல வழிகளிலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதற்குக் கொரோனாப் பெருந்தொற்றே காரணம். இதை மக்கள் நன்குணர்வார்கள். ஆனால், எதிரணியினர் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கின்றனர். அவர்கள் நாடெங்கும் சென்று அரசுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

எதிரணியினரின் இந்தப் பொய்ப் பிரசாரங்களை எமக்கு ஆணை வழங்கிய மக்கள் நம்பவேமாட்டார்கள். ஏனெனில், அவர்களுக்கு உண்மை நிலைவரம் தெரியும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் படுதோல்வியைச் சந்தித்தது. இந்தக் கட்சியால் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கொண்ட எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது.

இவ்வருடத்தில் நாடு முன்னோக்கிச் செல்லும் வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும் - என்றார்.

## ஈழ - தமிழகத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாடு அரசின் 'அயலகத் தமிழர் நாள்' நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு முதல் தமிழ் நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்துகொண்டு பேருரையாற்றினார்.

தமிழக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் உலமெங்கும் உள்ள சாதனைத் தமிழர்கள் இணைய வழியில் கலந்து கொண்டனர்.

அந்த முறைமையில் இலங்கையிலிருந்து சுமந்திரன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவரது உரையை நிகழ்வு நடைபெற்ற மண்டபத்திலிருந்த தமிழக முதல்வர் ஸ்டாலினும் பிற முக்கியஸ்தர்களும் செவிமடுத்தனர்.

அப்போது சுமந்திரன் கூறியவை வருமாறு:-

ஈழத் தமிழகத்திலிருந்து இந்த வாழ்த்துச் செய்தியை கொண்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அயலகத் தமிழர்கள் என்று குறிப்பிடும்போது மிக நெருக்கமாக பக்கத்தில் இருக்கின்ற ஈழத்தமிழர்களாகிய நாங்கள்தான் அதற்கு அதிகம் உரித்துடையவர்கள் என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலிருந்து ஒரு சில கிலோமீட்டர் தூரத்தில் வாழ்கின்ற ஈழத் தமிழர்களாகிய நாங்கள், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் செறிந்து குடி அமர்ந்திருக்கின்றோம்.

இந்த இரண்டு மாகாணங்களிலும் தமிழர்கள் தங்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையோடு அதற்கு உகந்த ஓர் ஆட்சி முறை மாற்றத்தின்படி, தங்களைத் தாங்களே ஆளுகின்ற ஓர் அரசு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற என்ற வேட்கையோடு, உங்களின் அயலவர்களாக தமிழர்களாக நாங்கள் வாழ்ந்து வருகிறோம்.

முதலமைச்சர் அவர்களே! உங்கள் தந்தையார் மாண்புமிகு மு கருணாநிதி அவர்கள் உலகத் தமிழர்கள் எல்லோருக்கும் தலைவராக விளங்கியவர். அவரது பெரும் பணியை அவர் எங்களோடு வைத்திருந்த நட்பை நாங்கள் மீட்டுப் பார்க்க வேண்டிய ஒரு கட்டாய தேவை இந்த வேளையிலே இருக்கின்றது. அதனை நன்றி உணர்வோடு நாங்கள் நினைவு கூர்கின்றோம்.

அப்படியான ஒரு ஸ்தானத்துக்கு, இந்த அயலவர் தமிழர் திருநாளை கொண்டாடுவதன் மூலம், அதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, நீங்கள் தமிழ்நாட்டுக்கு வெளியே உலகெங்கும் வாழும் தமிழர்களைத் திரட்டி அனைத்து தமிழர்களுக்கும் தலைமைத்துவம் கொடுக்கின்றீர்கள்.

இந்த முயற்சியில் உங்கள் தந்தை யாருடைய பாத அடிகளை நீங்கள் தொடர்ந்து வருகின்றீர்கள் என்பதை காண்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். உங்களின் இந்த மகத்தான பணி வெற்றி பெற வேண்டும் என்றும், அதன் மூலம் உலக தமிழர்கள் எல்லோரும் ஒன்றாகத் திரண்டு எங்கள் தாய் மொழியையும், தமிழ் கலாச்சாரத்தையும், நாங்கள் மென்மேலும் வளர்க்கத் தக்கதாக அது அமைய வேண்டும் என்றும் வாழ்த்துகிறோம்.

நாங்கள் எங்களுக்குள் ஒருவருக்கொருவர் உதவியாக அது கலை, கலாச்சாரமாக இருக்கட்டும் தமிழ் மொழி வளர்ப்பிலாக இருக்கட்டும் நாங்கள் வாழுகின்ற நாடுகளில் எங்களுக்கு உரித்தான அரசியல் உரிமைகளாக இருக்கட்டும் அந்த விடயங்களில் நாங்கள் இணைந்தவர்கள், 'தமிழால் இணைவோம்' என்ற இந்நிகழ்வின் ஊடாக கூட நாம் அதனை வலியுறுத்துகிறோம்.

விசேடமாக தமிழக முதல்வருக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே ஈழத் தமிழர்களின் சார்பில் எங்கள் பெரு நன்றியைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது. எங்கள் தேசத்தில் இருந்து ஏதிலிகளாக இடம்பெயர்ந்து, உங்கள் நாட்டில் பல தசாப்தங்களாக வாழுகின்ற எங்கள் உறவுகளுக்கு நீங்கள் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற பல நல்ல திட்டங்களுக்கு நாங்கள் என்றும் நன்றியாக இருக்கின்றோம். நீங்கள் முதலமைச்சர் பதவியை எடுத்த காலம் முதல் அவர்களை உங்களில் ஒரு பகுதியினராக நினைத்து அவர்களுக்காகப் பெரும் நிதி ஒதுக்கீடு செய்து, பல நல்ல திட்டங்களை முன்னெடுத்து இருக்கிறீர்கள். அவர்களின் நலன்களை மிகுந்த அக்கறை கொண்டு கவனித்து வரும் உங்களுக்கு அவர்களின் உறவுகளான நாங்கள் இங்கு எங்கள் நாட்டிலிருந்து பெரு நன்றியை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த முயற்சி மூலமாக இந்த நிகழ்ச்சி மூலமாக நாங்கள் ஒன்றிணைந்து வருகின்ற இந்த நடவடிக்கை மூலமாக உலகத் தமிழர்கள் ஒன்றாக சேர்ந்து எங்களுக்கு உரிய இடத்தை உலக வரைபடத்தில் நாங்கள் நிலை நிறுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு கிட்டும். இந்நிகழ்ச்சி அதற்கு பேருதவியாக இருக்கும். இதற்கு அடித்தளமிட்ட தமிழக முதலமைச்சருக்கும், அவரது அரசுக்கும், அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இலங்கை தமிழ் மக்கள் சார்பில் நன்றியையும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார் சுமந்திரன்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி. கே. எஸ்.மஸ்தான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமந்திரனுடன் மலேசியா, அமெரிக்கா, பப்புவா நியூகினியா, மொரிஷியஸ், லண்டன் ஆகிய இடங்களில் இருந்து தலா ஒவ்வொரு சாதனைத் தமிழர்கள் தலா ஐந்து நிமிட நேரம் வாழ்த்துரை வழங்கினர்.

இன்றைய காலை அமர்வின் கடைசி நிகழ்வாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் விழா பேருரை இடம்பெற்றது.

## நாட்டில் இன்றிரவும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

இதனால் நாட்டில் பல பகுதிகளில் நேற்றும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சு.கவின் கிளர்ச்சி

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனான தமது கட்சியின் உறவு தொடர்பில் சு.க. தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தீர்க்கமான முடிவு ஒன்றை எடுத்து விட்டார் என்றே தோன்றுகின்றது.

எனினும் அவரின் இந்த நிலைப்பாடு – இறுக்கமான போக்கு – அவரது கட்சியின் ஒட்டுமொத்த தீர்மானமாக மாறுமா என்பதை இனித்தான் பார்க்க வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான கூட்டணியில் நேரடியாப் போட்டியிட்டவர்களில் 14 பேர் இப்போது அந்தக் கூட்டில் எம்.பிக்களாக இருக்கின்றனர். பொலன்னறுவை மாவட்டத்தில் போட்டியிட்டு மாவட்டத்தின் முதலாவது எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேனவும் அவர்களில் ஒருவர். அவருடன் சேர்ந்து சு.கவினர் 13 பேர் நேரடியாக தெரிவு செய்யப்பட்டனர். தேசியப்பட்டியல் எம்.பி. நியமனம் சுரேன் ராகவனுக்கு வழங்கப்பட்டது. தவிரவும் தனித்து சு.க. வேட்பாளர் பட்டியலுடன் களத்தில் இறங்கி எம்.பியான ஒருவரும் இருக்கின்றார். அவர், யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவாகி, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை வகிக்கும் அங்கஜன் இராமநாதன்.

225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் சு.கவினர் ஆக 15 பேர்தான். அரசுத் தலைமையுடன் முட்டி மோதிக் கொண்டிருக்கும் சு.கவின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தப் போக்கில் தொடர்ந்தால் அரசிலிருந்து அவரது கட்சி வெளியேறுவது அல்லது வெளியேற்றப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அத்தகைய முடிவு எட்டப்படுவதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

ஒன்று – கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வழிநடத்தலுக்கு அமைய அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால் கட்சியின் பிற 14 எம்பிக்களும் அவரைத் தொடர்வரா என்பது முதலாவது. அடுத்தது – அரசில் இருந்து வெளியேறுவதை அடுத்து ஏற்படக்கூடிய வலிகளைச் சுமக்க சு.கவில் இன்றும் மிஞ்சியிருக்கும் தலைவர்கள் தயாராஎன்பது.

இவை இரண்டும் தான் ஆட்சி தலைமையுடன் முட்டிமோதும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் செல்நெறியைத் தீர்மானிக்கப் போகின்றன.

சு.கவின் துணைத்தலைவர் பேராசிரியர் லஷ்மன் பியதாஸ அரசுக்கு எதிரான தமது கட்சித் தலைவரின் பகிரங்க வெளிப்படுத்துகையை ஆதரித்து நிற்பவர். தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்துக்கு கட்சியால் பரிந்துரைக் கப்பட்டும், ராஜபக்ஷக்களால் அது வழங்கப்படாதமையால் கடுப்பில் இருப்பவர். அதனால் அரசுத் தலைமைக்கு எதிரான போக்கில் தீவிர நிலைப் பாட்டை அவர் ஆதரிக்கின்றமை ஆச்சரியம் அல்ல.

கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவும் கட்சித் தலைவரின் இந்த போக்கை அங்கீகரிக்கின்றார். மூத்த உறுப்பினரான தமக்கு வெறும் பற்றிக் துணிமணி விவகார இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்ட கடுப்பு அவருக்கு.

இவர்களை தவிர, கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண போன்றோர் கூட தம் வசமிருக்கும் அமைச்சர் பதவிகளைக் கைவிட்டு, கட்சித் தலைவருடன் சேர்ந்து – நிலைமை ஏற்படுமானால் – ஆளும் கூட்டமைப்பிலிருந்து வெளியே வருவார்கள் என நம்பலாம்.

ஆனால், தமிழர்களான அங்கஜன் இராமநாதன், சுரேன் இராகவன், முஸ்லிமான காதர் மஸ்தான் போன்றோர் அத்தகைய நெருக்கடி நிலை வரும்போது கட்சித் தீர்மானத்துக்கு அமைய, அரசிலிருந்து வெளிய வருவார்களா? நிச்சயமாக இல்லை என்பதுதான் அரசியல் அவதானிகள் உறுதியான பதிலாக உள்ளது. அரசுக்கு எதிராக தீவிர நிலைப்பாட்டை கட்சித் தலைமை எடுத்தாலும் கட்சிக்குள் குழப்பம் நீடிக்கும் என்பதுதான் யதார்த்தமாக இருக்கும்.



# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சிறு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேரில் விஜயம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) சிறு நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் வே.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறு நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

24 லட்சம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரத்தை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தி உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளர் அகிலதாஸ், கிருபா பியிற்சி கல்லூரி அதிபரும் ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்களில் ஒருவருமான கிருபாகரன, மற்றும் கிளிநொச்சி யாழ்பாண மாவட்டங்களின் அமைப்பாளர்கள், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவ நிபுணர்கள், வைத்தியசாலை, தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு குறித்து கிளிநொச்சியில் கலந்துரையாடல்



கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் சிந்தனைக்கு அமைவாகவும் அவருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலும் சமூகத்தில் பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் தோறும் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் முதன் முறையாக மேற்படி கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ,உதவி மாவட்ட செயலர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மகளிர் குழுக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ; கருத்து தெரிவிக்கையில், வடமாகாண ஆளுநருடன் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சந்தித்து மேற்கொண்ட திறந்தவெளி கலந்துரையாடலின்போது பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குடும்ப வன்முறைகள், பிள்ளைகளை பராமரித்தல், பொருளாதார ரீதியான பிரச்சினைகள் ஆராயப்பட்டன. அதனடிப் படையிலேயே கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடலின் ஊடாக மகளிர் குழுக்களின் கருத்துக்களும் பெண்கள் அபிவிருத்தியோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் கருத்துகளும் தேவைப் படுகின்றன. அதனடிப்படையில் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டார்.

அதனடிப்படையில் கலந்துரையாடலில் பங்குபற்றிய பங்குபற்றுநர்கள் அனைவரதும் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

அந்த வகையில் நுண்கடன் பிரச்சினைகள்,வாழ்வாதார உதவிகள், வாழ்வாதாரத்துக்காக எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், வீட்டு வன்முறை, இளவயது கர்ப்பம், சட்ட விரோதமான கருக்கலைப்பு, சட்டவிரோதமான போதைப்பொருள் பாவனை, சட்ட விரோத மதுபான உற்பத்தி, பாலியல் வன்முறை உள்ளிட்ட பிரச்சினைகளில் மாவட்ட மட்டத்தில் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினைகள் தவிர்ந்த ஏனைய பிரச்சினைகள் ஆளுநர் கௌரவ ஜீவன் தியாகராஜாவின் கவனத்துக்கும் மாகாண மட்டத்தில் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவதற்குமாக இந்தக் கலந்துரையாடல் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# நிலவில் தண்ணீர் ஆதாரம்: சீன விண்கலம் கண்டுபிடிப்பு

நிலவின் தரைப்பரப்பில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களை சீனா விண்கலம் கண்டறிந்துள்ளது.

நிலவில் ஆய்வு மேற்கொள்வதற்காக சாங்கே-5 என்ற விண்கலத்தை 2020, நவம்பரில் சீனா அனுப்பியது.

நிலவின் மத்திய உயா அட்சரேகை பகுதியில் தரையிறங்கிய அந்த விண்கலத்தின் லேண்டரில் உள்ள ஒரு கருவி, தரைப்பரப்பில் உள்ள பாறையின் நிறமாலை பிரதிபலிப்பை அந்த இடத்திலேயே அளந்தது. பின்னா, 1, 731 கிராம் எடையிலான பாறை மாதிரியுடன் விண்கலம் பூமிக்குத் திரும்பியது.

அந்தப் பாறை மாதிரியை சீன அறிவியல் அகாதெமியைச் சோந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனா. அதன் முடிவுகள் ‘சயின்ஸ் அட்வான்சஸ்’ இதழில் வெளியாகியுள்ளது.

அதன்படி, நிலவின் தரைப்பரப்பில் உள்ள பாறைப் படிவங்களில் ஒரு டன்னுக்கு 120 கிராம் தண்ணீா இருப்பதாகத் தெரியவந்துள்ளது. சந்திரனின் நிலப்பரப்பில் அதிக ஈரப்பதத்துக்கு காரணம் சூரிய காற்று ஆகும். அதுதான் தண்ணீரை உருவாக்கும் ஹைட்ரஜனை கொண்டு வந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனா.

# லிதுவேனியாவை சீனா கொடுமைப்படுத்துகிறது

## தாய்வான் குற்றச்சாட்டு




லிதுவேனியாவை சீனா கொடுமைப்படுத்துவதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள தாய்வான் ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளிடையே ஒற்றுமை அவசியம் எனவும் அழைப்பு விடுத்துள்ளது.

தாய்வான் வெளியுறவு அமைச்சு லிதுவேனியாவில் தனது நாட்டின் பிரதிநிதி அலுவலகத்தை நிறுவுவதற்கு அனுமதி அளித்தமையானது ஐரோப்பாவுடனான உறவுகளில் ஒரு திருப்புமுனையாக உள்ளது எனவும் பாராட்டைப் பெறுவதாக தைபே டைம்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் லிதுவினியாவில் தாய்வானின் பிரதிநிதி அலுவலகம் திறக்கப்பட்டது.

இதுகுறித்து லிதுவேனியன் ஜனாதிபதி நௌசேடா உள்ளூர் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், ‘தாய்வான் அலுவலகத்தைத் திறந்தது தவறு எனவும் நான் நினைக்கிறேன் என்று கூறியதாக புனையப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது’ என்று கூறி யுள்ளார்.

லிதுவேனியா மீது அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தத்தை பிரயோகிக்க கேவலமான வழிமுறைகளை சீனா பயன்படுத்தியதற்காக தாம் கடுமையாக கண்டிக்கின்றோம் என்றுதயர்வானின் செய்தித் தொடர்பாளர் ஜோன் ஓவ் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக நாடுகளின் ஒற்றுமை ஒரு சர்வாதிகார ஆட்சியின் கொடுமைக்கு எதிராக வெற்றி பெறும் என்று தாம் நம்புகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

பெய்ஜிங்கின் அழுத்தத்திற்கு அடிபணியாது ஜனநாயகம், சுதந்திர வர்த்தகம் மற்றும் சந்தைப் பொருளாதாரத்தை மதிக்கும் ஒத்த எண்ணம் கொண்ட நாடுகள் தம்முடன் கைகோர்க்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். லிதுவேனியாவிற்கு எதிராக சீனா பழிவாங்கும் வகையில் விதித்த தடைகளை மீறி, தாய்வான் தனது புதிய பிரதிநிதி அலுவலகத்தை பால்டிக் மாநிலத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அதிகாரப்பூர்வமாக திறந்துள்ளது.

அந்த பிரதிநிதி அலுவலகத்தில் ‘தாய்வானியர்களை’ அனுமதிக்கும் லிதுவேனியாவின் முடிவுக்கு சீனா கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளது.

அத்துடன், தாய்வானின் பிரதிநிதி அலுவலகத்தை திறப்பதற்கு அனுமதிப்பது என்ற லிதுவியாவின் முடிவைத் தொடர்ந்து அந்நாடு சீனாவிடமிருந்து அதிக அழுத்தத்தை எதிர்கொள்கிறது.

புதிய அலுவலகம், தாய்வான் மற்றும் பால்டிக் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்துவதுடன், அந்நாட்டில் உள்ள தாய்வான் குடிமக்களுக்கு சேவை செய்து பாதுகாக்கும் பொறுப்பை உடனடியாக அமுலுக்கு கொண்டு வரும் என்று ஃபோக்கஸ் தாய்வான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வான், சீனாவின் தென்கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 24 மில்லியன் மக்களைக் கொண்ட ஜனநாயகமாகும். ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக தனித்தனியாக ஆளப்பட்ட போதிலும், ‘தாய்வானின் சுதந்திரம்’ என்றால் ‘போர்’ என்று சீனா மிரட்டு கிறமை குறிப்பிடத்தக்கது.

# பாலைவனத்தில் 40 ஆண்டுகளாக தணியாத தீயை அணைக்க துர்க்மெனிஸ்தான் முடிவு



ஒரு பாலைவனத்தில் உள்ள பெரும்பள்ளத்தில் பல தசாப்தங்களாக எரிந்து கொண்டிருக்கும் தீயை அணைக்க துர்க்மெனிஸ்தான் அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

கேட்வே டு ஹெல் அல்லது நரகத்தின் வாயில் என்று அழைக்கப்படும் இந்தத் தீ சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கிறது.

மேலும் சுகாதாரக் காரணங்களுக்காகவும், நாட்டின் எரிவாயு ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்துடனும் தீயை அணைக்க அதிபர் குர்பாங்குலி பெர்டி முகாமேதோவ் உத்தரவிட்டுள்ளார்.

காராகும் பாலைவனத்தில் இந்தப் பெரும்பள்ளம் எப்படி உருவானது என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

1971-ஆம் ஆண்டு சோவியத் அரசின் எண்ணெய் தோண்டும் பணியின்போது ஏற்பட்ட தவறால் இந்தப் பள்ளம் உருவாகி இருக்கலாம் எனப் பலர் நம்புகிறார்கள்.

ஆனால் கனடாவைச் சேர்ந்த ஆய்வாளர் ஜார்ஜ் குரூனிஸ் 2013 இல் இந்தப் பள்ளத்தை ஆய்வு செய்துவிட்டு, அது எப்படி உருவானது என்பதை யாருக்கும் தெரியாது என்று கூறிவிட்டார்.

இந்தப் பெரும்பள்ளம் 1960 களில் உருவாகியிருக்கலாம் என்றும், 1980களில் இருந்து எரியத் தொடங்கியிருக்கலாம் என்றும் துர்க்மெனிஸ்தானைச் சேர்ந்த நிலவியலாளர்கள் கூறுகிறார்கள்.

சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவித்தாலும், இந்த பள்ளம் துர்க்மெனிஸ்தானின் மிகவும் பிரபலமான சுற்றுலாத்தலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது.

கணிசமான லாபத்தைப் பெற்று மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தக்கூடிய பல மதிப்புமிக்க இயற்கை வளங்களை நாம் இழந்து வருகிறோம், என்று தனது தொலைக்காட்சி உரையில் அதிபர் கூறினார்.

தீயை அணைக்க தீர்வு காண அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நகரத்தின் நுழைவாயில் தீயை அணைக்க இதற்கு முன்பும் பல முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 2010ஆம் ஆண்டிலும் தீயை அணைக்க ஒரு வழியைக் கண்டுபிடிக்குமாறு நிபுணர்களுக்கு அதிபர் பெர்டி முகாமேதோவ் உத்தரவிட்டார். ஆனால் அந்த முயற்சிகள் பலன் தரவில்லை.

2018ஆம் ஆண்டில், அந்தப் பள்ளத்துக்கு காராகும்மின் பிரகாசம் என்று அதிகாரப்பூர்வமாகப் பெயரிட்டார்.

# கொரோனாத் தடுப்பூசி போடாதோருக்கு மருத்துவ வரி விதிக்க கனடாவின் கியூபெக் மாகாண அரசு முடிவு செய்துள்ளது

இதன்படி தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டால் சிகிச்சைக்கான கட்டணங்களை அவர்களே செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. கனடாவிலேயே அதிகமான கொரோனா மரணங்கள் கியூபெக் மாகாணத்தில் பதிவாகியுள்ளன. அத்துடன், ஒமிக்ரோன் திரிவு பரவல் தற்போது அங்கு தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் மாகாணத்தில் 12.8% பேர் இதுவரை தடுப்பூசி போடவில்லை. கொரோனாவால் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டு தற்போது சிகிச்சை பெற்று வருபவர்களில் 50 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களாக உள்ளனர். இவ்வாறான நிலையிலேயே தடுப்பூசி போடாதவர்களுக்கு மருத்துவ வரி விதிக்க கியூபெக் மாகாண அரசு முடிவு செய்துள்ளது என மாகாண முதல்வர் பிராங்கோயிஸ் லெகால்ட் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

கியூபெக் மாகாணத்தில் வசிக்கும் 85% க்கும் அதிகமானோர் ஜனவரி 1 வரையான காலப்பகுதிக்குள் குறைந்தபட்சம் ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் தடுப்பூசி ஒன்றைக் கூட இதுவரை பெறாதவர்கள் மருத்துவ வரியைச் செலுத்த வேண்டும் என பிராங்கோயிஸ் லெகால்ட் தெரிவித்தார். எனினும் இந்த வரி தொடர்பான மேலதிக தகவல்களை அவா உடனடியாக வெளியிடவில்லை. நேற்று செவ்வாய்க்கிழமை கியூபெக் மாகாணத்தில் 8,710 புதிய தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். அத்துடன், 62 பேர் உயிரிழந்தனர். இவர்களுடன் மாகாணத்தில் கொரோனாவுக்கு பலியானோர் தொகை 12,028 ஐ எட்டியது. தற்போது தொற்று நோயால் கடும் பாதிப்புகளை எதிர் கொண்டு தீவிர சிகிச்சையில் உள்ளவர்களில் 45% பேர் தடுப்பூசி போடாதவர்கள் என மாகாண தரவுகள் தெரிவிக்கின்றன.

மாகாணத்தின் மிகப்பெரிய நகரமான மொன்றியலில் உள்ள வைத்தியசாலைகள் கிட்டத்தட்ட 100% நோயாளிகளால் நிரம்பியுள்ளன.

கியூபெக் வைத்தியசாலைகள் தற்போது 2,742 கொவிட் நோயாளிகள் உள்ளனர், இதில் 244 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத்திலும் கொரோனா பரிசோதனை கட்டணத்தை குறைக்கவேண்டுமென அன்புமணி ராமதாஸ் கோரிக்கை

கொரோனாவின் மூன்றாவது அலையால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் உருவெடுத்துள்ள நிலையில், அதைக் கட்டுப்படுத்த தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் கொரோனா ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழகத்தில் கொரோனா சோதனைக் கட்டணம் மிக அதிகமாக இருக்கின்றமை இதற்குத் தடையாக உள்ளது, என்று பா.ம.க. இளைஞரணித்தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

மேலும் அவரது அறிக்கையில், இந்தியாவில் நமது அண்டை மாநிலங்களாக கர்நாடகம், கேரளம் ஆகியவற்றில் தனியார் ஆய்வகங்களில் கொரோனா சோதனைக்கு 500 ரூபா மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. டெல்லி, ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் தனியார் ஆய்வகங்களில் கொரோனா சோதனை 500 ரூபாவுக்கே மேற்கொள்ளப்படுகிறது. மகாராஷ்டிரா மாநிலத்தில் அரசு நிறுவனங்களில் கொரோனா சோதனைக்கு 350 ரூபா மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே மிகக்குறைவாக ஆந்திராவில் தனியார் ஆய்வகங்களில்கொரோனாசோதனைக் கட்டணம் 475 ரூபாவாக உள்ளது.



ஆனால், மருத்துவக் கட்டமைப்பில் முன்னேறிய தமிழகத்தில் மட்டும் கொரோனா சோதனைக் கட்டணம் மிக அதிகமாக வுள்ளது.

தமிழ்நாட்டில் அரசு முகாம்கள் மூலம் கொரோனா சோதனை இலவசமாக செய்யப்படுகிறது. அரசு ஆய்வகங்களில் தனிப்பட்ட முறையில் சோதனை செய்து கொள்பவர்களுக்கு 550 ரூபா கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தனியார் ஆய்வகங்களில் இது 900 ரூபாவாக உள்ளது. சென்னை விமான நிலையத்தில் கொரோனா சோதனைக் கட்டணம் 600 ரூபாவா உள்ளது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் விட தமிழ்நாட்டில் தான் கொரோனா சோதனைக்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது, இது தவறு.

2020 ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் பரவல் உச்சத்தில் இருந்த போது ஆர்.டி.– பி.சி.ஆர் கொரோனா ஆய்வுக்கான அதிகபட்சக் கட்டணமாக 4 ஆயிரத்து500ரூபாநிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் சில ஆய்வகங்களில் 6 ஆயிரம் ரூபா வரை கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் ஆர்.டி. – பி.சி.ஆர் ஆய்வுக் கருவிகள் தாராளமாக கிடைக்கத் தொடங்கிய நிலையில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழுவின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து நாடு முழுவதும் தனியார் ஆய்வகங்களில் கொரோனா ஆய்வுக்கான அதிகபட்சக் கட்டணம் 3,000 ரூபா ஆகவும், வீடுகளுக்கு வந்து மாதிரிகளை எடுத்துச் செல்ல 500 ரூபா கூடுதல் கட்டணம் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

அதன்பின் கொரோனா சோதனைக் கட்டணம் படிப்படியாக குறைக்கப்பட்டு, கடந்த 6 மாதங்களாகவே 500 ரூபாவாகத்தான் மற்ற மாநிலங்களில் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழகத்தில் மட்டும் கடந்த மே மாதம் முதல் இதே கட்டணம் தான் வசூலிக்கப்படுகிறது. அதன்பின் மற்ற மாநிலங்கள் கட்டணத்தைக் குறைத்த போதிலும் தமிழகம் குறைக்கவில்லை.

முதல் அலை, இரண்டாவது அலை ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது தமிழகத்தில் இப்போது கொரோனா மிக வேகமாக பரவி வருகிறது. இத்தகைய சூழலில் அதிக எண்ணிக்கையில் கொரோனா சோதனைகளை செய்வதன் மூலம்தான் நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக நேற்று 1.35 லட்சம் சோதனைகள் மட்டும்தான் செய்யப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில் இது மிகவும் குறைவு. கொரோனா சோதனைகளை ஒரு நாளைக்கு 3 லட்சம் என்ற அளவுக்கு அதிகரித்தால் தான் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தி, கொரோனா நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த முடியும்.

தமிழ்நாட்டில் தனியார் ஆய்வகங்களின் பங்களிப்பு இல்லாமல் சோதனைகளை அதிகரிக்க முடியாது. தமிழகத்தில் இன்றைய நிலையில் மொத்தம் 321 கொரோனா ஆய்வகங்கள் உள்ளன. அவற்றில் 69 மட்டுமே அரசு ஆய்வகங்கள். மீதமுள்ள 252 ஆய்வகங்கள் தனியாருக்கு சொந்தமானவை. அவற்றில் கட்டணம் குறைக்கப்பட்டால் மக்கள் தனியார் ஆய்வகங்களிலும் கொரோனா பரிசோதனைகளை செய்து கொள்வார்கள். அதற்கு வசதியாக தனியார் ஆய்வகங்களில் கட்டணத்தை குறைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில்கொரோனாமூன்றாவது அலையை விரைவாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துடன், தனியார் ஆய்வகங்களின் கொரோனா ஆய்வுக் கட்டணத்தை மற்ற மாநிலங்களுக்கு இணையாக 500 ரூபாவாக குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்




## ஈஷா அறக்கட்டளைக்கு எதிராக நடவடிக்கை சென்னை உயர்நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியது

கோவை மாவட்டத்தில் செயல்படும் ஈஷா யோகா அறக்கட்டளைக்கு சொந்தமான கட்டடங்கள் போலாம்பட்டி வனச்சரகத்தில் யானைகள் பயன்படுத்திவரும் வழித்தடத்தில் அமைந்துள்ளதாக முறைப்பாடு எழுந்தது.

இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த நிலையில் ஈஷா அறக்கட்டளை கட்டிடங்கள் மீது நட வடிக்கை எடுப்பது தொடர்பாக தமிழக அரசு நோட்டீஸ் அனுப்பியது.

இதை எதிர்த்து ஈஷா தரப்பில் சென்னை உயர்நீதிமன்றம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இன்று நடைபெற்ற விசாரணையின் போது 2014 ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவிப்பாணையின்படி, ஈஷா அறக்கட்டளைக்கு எதிராக புகார் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அப் போது கல்விப்பயன்பாட்டுக்கட்டிடங்களுக்குசுற்றுச்சூழல் அனுமதி பெறுவதில் இருந்து விலக்கு பெற உரிமை உள்ளது என, ஈஷா தரப்பில் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட சென்னை உயர்நீதிமன்றம் சுற்றுச்சூழல் அனுமதியின்றி கட்டுமானங்கள் மேற்கொண்டதாகத் தொடரப்பட்ட வழக்கில் ஈஷா அறக்கட்டளைக்கு எதிராக மேல் நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

## உத்தரப்பிரதேச தேர்தலில் மாயாவதி போட்டியிடவில்லை

### பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி.யான சந்திரா மிஸ்ரா தகவல்

உத்தரப்பிரதேசத்தில் சட்டப் பேரவை தேர்தல் வரும் பெப்ரவரி 10 முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெறவுள்ளது. இதற்காக அனைத்துக் கட்சியினரும் தீவிரமாக பிசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்தநிலையில், உத்தரப்பிரதேச தேர்தலில் மாயாவதி போட்டியிடவில்லை என பகுஜன் சமாஜ் கட்சி அறிவித்துள்ளது. இதுகுறித்து அக் கட்சியின் எம்.பி. சந்திரா மிஸ்ரா தகவல் வழங்கும்போது, உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதல்வர் மாயாவதி வரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. இருப்பினும் மொத்தமுள்ள 403 சட்டமன்றத் தொகுதிகளிலும் பகுஜன் சமாஜ் கட்சி தனித்துப் போட்டியிடும்.

எம்மை எதிர்த்துப் போட்டியிடும் சமாஜ்வாதி கட்சியிடம் 400 வேட்பாளர்கள்கூட கிடையாது. பிறகு எப்படி அகிலேஷ் யாதவ் ஆட்சியைப் பிடிக்க முடியும்? இந்த முறை பா.ஜ.கவும், சமாஜ்வாதி கட்சியும் உத்தரப் பிரதேசத்தை ஆளப்போவதில்லை. பகுஜன் சமாஜ் கட்சிதான் ஆளப் போகிறது, என்று தெரிவித்துள்ளார்.






# கொரோனா நோயாளிகளுக்கு இணையத்தின் மூலம் யோகா பயிற்சி வழங்கவுள்ளதாக கெஜ்ரிவால் தகவல்

டெல்லியில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆலோசனை நடத்தியுள்ளார்.

சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குத் தகவல் வழங்கிய அவர், கடந்த சில நாள்களில் கொரோனா பரவல் 25 சதவீதமாக உள்ளது. 22 ஆயிரம் பேருக்கு கொரோனாப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. நாங்கள் முழு அடைப்பைக் கொண்டு வரமாட்டோம். வீட்டிலேயே தனிமைப்படுத் தப்பட்ட கொரோனா நோயாளிகளுக்கு சிறப்பு யோகா மற்றும் தியான வகுப்புகளை அரசு ஏற்பாடு செய் துள்ளது.

இணையம் மூலம் கொரோனா நோயாளிகளுக்கு யோகா பயிற்சி வழங்கப்படும். இது குறித்த இணையத்தள முகவரி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

விரைவில் கொரோனா பாதிப்பு குறையும் என்று நான் நம்புகிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.

# காணாமல் போன 13 வயதான சிறுமி ஒரு மாதமாகியும் வீடு திரும்பவில்லை




திருகோணமலை – மூதூர் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட புளியடிச்சோலை கிராமத்தைச் சேர்ந்த ஜெய சீலன் லக்ஷிகா 13 வயதான சிறுமி காணாமல் போன நிலையில் ஒரு மாத காலமாகியும் வீடுதிரும்பவில்லை என சிறுமியின் தாய் கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி காணாமல் போயிருந்த நிலையில் சிறுமி ஜெயசீலன் லக்ஷிகா இதுவரை வீடு திரும்பவில்லை, ஒரு மாதத்திற்கு மேலாகியும் தனது மகளை பொலிஸார் கண்டுபிடித்துத் தரவில்லை, இது தொடர்பாக திரு கோணமலையில் உள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு பதிவுசெய்துள்ளேன் இது வரை எவ்வித பயனும் இல்லை,எனது மகள் ஜெய சீலன் லக்ஷிகாவிற்கு ஏதும் நடந்திருந்தால் இந்த அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டுமெனவும் தனது மகளை கண்டுபிடித்து தருமாறு ஊடகங்களின் உத வியினை நாடி வந்துள்ள தாகவும் காணாமல் போன சிறுமி ஜெயசீலன் லக்ஷிகாவின் தாயார் தெரிவித் தார்

இது தொடர்பில் நேற்று காணாமல் போன சிறுமி ஜெயசீலன் லக்ஷிகாவின் தாயினால் திருகோணம லையில் ஊடக சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்து இவ்வாறு கருத்து தெரிவித்தார்

8 ஆம் தரத்தில் கல்விகற்று வந்த எனது மகள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி காணாமல் போயிருந்தார். இது தொடர்பாக மூதூர் பொலிஸ் நிலையத்தில் மறுநாள் 8ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தேன். எனினும் ஒரு மாதத்திற்கு மேலாகியும் எனது மகளை பொலிஸார் இன்னும் கண்டுபிடித்துத் தரவில்லை. இது தொடர்பாக திருகோணமலையில் உள்ளமனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப் பாடு செய்திருக்கின்றேன். எனினும் எவ்வித பலனும் இல்லை.எனது மகள் வகுப்பில் முதலாவது பிள்ளையா கத் தான் வருவார். நல்ல கெட்டிக்காரி. அவரை பல இடங்களிலும் நாங்களும் தேடிப் பார்த்தோம் காண வில்லை.ஒவ்வொரு நாளும் செய்திகளைப் பார்க் கின்றபோது எனக்கு பயமாக இருக்கின்றது.

மேலும், எனது பிள்ளையை எப்படியாவது கண்டு பிடித்துத் தாருங்கள் என பொறுப்பான அனைத்து தரப்பினரிடமும் மன் றாட்டமாக கேட்டுக் கொள்வதா கவும் எனது பிள்ளைக்கு ஏதாவது நடந் தால் அரசாங் கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

## தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் விசேட வேலைத் திட்டங்கள் ஆரம்பம்

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு டெங்கு நோயின்தாக்கத்தை கட்டுப்படுத்தும் முகமாக விசேட வேலைத்திட்டங்கள் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் இடம்பெற்று வருகிறன.

கடந்த வருடத்தில் அதிக நோயா ளர்கள் இனம் காணப்பட்ட இடங் களான கல்குடா,கண்ணகிபுரம் மற் றும் மீராவோடை போன்ற கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள குடியி ருப்பாளர்களின் வீடுகள் அடை யாளப் படுத்தப்பட்டு வீடு வீடாக சென்று களப் பரிசோதனை நட வடிக்கைள் மேற்கொள்ளப்படு கின்றன.

சுற்றுச்சூழல் அவதானிக்கப்பட்டு நீர் தேங்கி நிற்கும் தேவையற்ற பொருள்கள் அகற்றப்பட்டு நுளம்பு பரவும் இடங்கள் அழிக்கப்பட்டு விழிப்புணர்வு அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக் கைகளும் இடம்பெற்று வருகிறன. மேற்படி நடவடிக்கைகள் யாவும் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தி யர் ஸ்ரிவ் சஞ்ஜிவ் தேவராஜ முதலியின் வழிகாட்டலில் சுகா தாரப் பகுதியினர், பொலிஸார், இரா ணுவத்தினர் ஆகியோர் இவ் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.



## சுவாமி விவேகாந்தரின் 160 ஆவது பிறந்த தினம்

கிழக்கு மாகாணத்தில் சுவாமி விவே காந்தரின் 160 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பல்வேறு நினைவு தின நிகழ்வுகள் இன்று சுகாதார வழி முறைகளை பின்பற்றி முன்னெடுக்கப்பட்டது.

இன ஒற்றுமைக்கு எடுத்து காட்டாக விளங்கும் மட்டக்களப்பு மண்முனை பற்று ஆரையம்பதி கிராமத்தில் ஆரம்பத்தில் இருந்து காணப்படும் சுவாமி விவேகாந்தரின் உருவ சிலை இருக்கும் இடத்தில் மட்டக்களப்பு ஆற்றல் போரவையின் தலைவரும் முன் னாள் மாகாணசபை உறுப்பினருமான பு.பிரசாந்தன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

## தோட்ட வளாகத்திலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுணதீவு பொலிஸ் பிரிவிற் குட்பட்ட பழங்குடியிருப்பு பிரதேசத் தில் உள்ள தோட்ட வளாகத்திலி ருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லடிப்பிரதேசத்தைச் சேர்ந்த தம்பிராஜா இராஜகோபால் வயது (62) என்பவர் பழங்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள தனது சொந்த தோட்ட வளாகத்தில் உள்ள வீட்டில் இருந்து தனது உதவியாளருடன் தோட்டத்தைப் பராமரித்து வருவதா கவும் சம்ப தினத்தண்டு இரவுச் சாப்பாட்டை உண்டு விட்டு தனியாக நித்திரை செய்த நிலையில் மறுநாள் அவரின் உதவியாளர் சென்று பார்த்த போது மரணமான நிலையில் காணப்பட்டதாக பொலி ஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணை களின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் அவர் களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சட லத்தை பார்வையிட்டதுடன் சட லத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் படி பொலி ஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வவு ணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## தொழில்நுட்பக் கல்லூரி புதிய மாணவர்களின்

## அனுமதி தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியின் 2022 ஆம் கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களின் அனுமதி தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு தொழில் வழிகாட்டல் பிரிவின் ஏற்பாட்டில் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டு கடனை செலுத்த முடியும் மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை!



வெளிநாட்டு கடன்களைச் செலுத்த முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் அடுத்த ஒன்பது மாதங்களுக்கான பொருளாதார வேலைத்திட்டம் ஆரம்பிக் கப்படும் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

அதேநேரம், இந்த ஆண்டில் 5.5 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை எதிர்பார்ப்ப தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந் துள்ளதாக சிலர் தெரிவிக்கும் கருத்துக்களில் உண்மை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 25 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு கோருகின்றது இலங்கை சுதந்திர சேவையாளர் தொழிற்சங்கம்




கட்டுநாயக்க விமான நிலைய இலங்கை சுதந்திர சேவையாளர் தொழிற்சங்கம்ஊழியர்சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து பல விடயங்கள் தொடர் பில் கலந்துரை யாடியுள்ளனர்.

இதன்போது 25 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட 11 விடயங் கள் தொடர் பில் கலந்துரையாடப்பட்ட துடன், அந்த விடயங்களை விமான நிலைய அதிகார சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அடுத்த வாரத்துக்குள் குறித்த கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கப்படா விட்டால் தொழிற்சங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என சங்கத்தின் தலைவர் எம்.டபிள்யூ.டி.முஹாந்திரம் தெரிவித்துள்ளார்.

குறித்த கோரிக்கைகளுள் மத்தள விமான நிலைய எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பாதுகாத்தல் மற்றும் விமான நிலைய வாகன நிறுத்துமிடங்களை மீளப் பெறுதல் உள்ளிட்ட விடயங்களும் அடங்குகின்றன எனத் தெரி விக்கப்படுகிறது.

## மின்துண்டிக்கப்படாது என அறிவிக்கப்பட்ட நிலையில் நாட்டின் சில பகுதிகளில் நேற்றும் மின்சாரத் தடை!

நாட்டின் சில பகுதிகளில் திடீர் மின்தடை ஏற்பட்டுள்ளது.

மின்சார சபையின் தனி யார் மின்னுற்பத்தி நிலை யத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ்வாறு திடீர் மின்தடை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வத்தளை, கல்கிசை, இரத்மலானை, நுகேகொடை, அக்குரஸ்ஸ, பிபில, கெக் கிராவ, மாலபே, யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில பகுதிகளிலேயே இவ்வாறு மின் தடை ஏற்பட் டுள்ளதாகக் குறிப்பிடப்படு கின்றது.

நாட்டின் எந்த பகுதியிலும் மின் துண்டிக்கப்படமாட்டாது என இலங்கை மின்சார சபை அறிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மின்வெட்டால் பாதிக்கப்படும் மக்கள் மெழுகுவர்த்திக்கும் பாரிய தட்டுப்பாடு!

நாட்டின் சில பகுதிகளில் மெழுகுவர்த்திக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்வெட்டு காரணமாக மக்கள் மெழுகுவர்த் தியை அதிகம் பாவிப்பதோடு, எதிர்காலத்துக்கும் சேகரிப்பதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் எதிர்காலத்தில் நாட்டில் மெழுகுவர்த்திகள் உற்பத்தி செய்யப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபையின் கூட்டு தொழிற்சங்க கூட்டணியின் அழைப்பாளர் ரஞ் சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத் தின் உப உற்பத்தியாகவே மெழுகுவர்த்திகள் உற் பத்தி செய்யப்படுகின்றன எனவும் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதன் காரணமாக மெழுகு வர்த்தி உற்பத்தியும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





## யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக பாடசாலை நேரத்தில் அதிக நெரிசல்!

### பொலிஸ் கடமையும் இல்லை எனக் குற்றச்சாட்டு

**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம், ஜன.12

அரசடி வீதியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக தின மும் பாடசாலை நேரத்தில் வீதி யில் அதிக நெரிசல் ஏற்படுகின்ற போதும் பொலிசார் எவரும் கட மையில் இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த வீதியில் பாடசாலை நேரங்களில் கனரக வாகனம் பயணிக்கத் தடை அறிவித்தல் மாநகர சபையால் போடப்பட் டுள்ளபோதும் வீதியின் இரு மருங்கிலும் கனரக வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் டிப்பர், பார ஊர்தி மற்றும் கன்ரர் வாகனங்களும் பாடசாலை நேரமே பயணிக்கின்றமையால் அதிக நெருக்கடி ஏற்படுகின்றது.

இதேநேரம், கனரக வாகனம் பயணிக்கத் தடை அறிவித்தலை நாட்டியுள்ள மாநகர சபையின் 10 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களும் இதே பாதை யில் குறித்த நேரத்தில் பய ணிக்கின்றன எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

## கொழும்பு துறைமுக கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி இன்று ஆரம்பமாகியது

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனை யத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் இன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை) நடைபெற்ற ஊடகச் சந் திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன இத னைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றதாகத் தெரிவிக் கப் படுகின்றது. முனையம் 1,320 மீற்றர் நீளத்துக்கு நீடிக் கப்படும் என்றும், முழு முனையம் 75 ஹெக்டேயர் பரப்பள வில் மேற் கொள்ளப்படும் என்றும் அமைச் சர் கூறினார்.

மேலும் இன்று ஆரம்பிக் கப்பட்ட குறித்த திட்டம் 2024 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் திகதி முழுமையடையும் என்றும் அமைச்சர் ரோஹித அபேகுண வர்தன குறிப்பிட்டார்.

## கனடா தமிழரசுக் கட்சி ஏற்பாட்டில் யாழ். மக்களுக்கு பொங்கல் பொதி





கனடாவில் வசிக்கும் கனடா தமிழரசுக் கட்சியின் நிர்வாகசபை உறுப்பினர்களும், சமூக சேவையாளர்களான ராம்ஜி, பவன், மதி, பாலாஜி, கஜன், இந்து, தனுயன் மற்றும் அகிலா ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் நவக்கிரி புத்தூர், மட்டுவில் தெற்கு சாவகச்சேரியில் வசிக்கும் 100 குடும்பத் துக்கு "

அனைவரையும் பொங்கவைப்போம்" என்னும் செயற்றிட்டத்தின் கீழ் நேற்று (செவ்வாய்க்கிழமை) பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தப் பொதிகளை கனடா தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினருமாகிய கலாநிதி அகிலன் முத்துக்கு மாரசாமி ஒழுங்கமைத்துப் பயனாளிகளுக்கு வழங்கிவைத்தார். இதனைவிட, கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமியின் ஏற்பாட்டில் "

அனைவரையும் பொங்கவைப்போம்" செயற் றிட்டத்தின் கீழ் மாவட்டத்தின் பல இடங்களிலும் பொங்கல் பொதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2022இல் வெளியிடப்பெற்றது.